# புற்றுநோய்க்கு நவீன கதிர்வீச்சு சிகிச்சையில் பக்க விளைவுகள் வெகுவாக குறைகிறது

## கே.எம்.சி.எச். டாக்டர் இர.மது சாய்ராம் விளக்கம்



டாக்டர் இர.மது சாய்ராம்

**கோவை, பிப். 5:** வாய், தொண்டை, கர்ப்பப்பை, உணவுக்குழாய், மலக்குடல் ஆகிய புற்றுநோய்களுக்கு கதிர்வீச்சு சிகிச்சை முக்கிய சிகிச்சையாக உள்ளது. இதில் மலக்குடல் மற்றும் உணவுக்குழாய் புற்றுநோய்களுக்கு கதிர்வீச்சு சிகிச்சைக்கு பிறகு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. மூளையில் கட்டி, மார்பகக்கட்டி, முற்றிய வாய், தொண்டை புற்றுநோய் மற்றும் இரைப்பை, கை, கால் தசைகளில் வரக்கூடிய 'சார்கோமா' புற்றுநோய்களுக்கு அறுவை சிகிச்சைக்குப்பின்னர் கதிர் வீச்சு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

முன்பு கதிர்வீச்சு செலுத்த 'கோபால்ட் தெரபி' எனும் '2டி' கதிர் வீச்சுசிகிச்சைஇருந்தது. இச்சிகிச்சையில் செலுத்தப்படும் கதிர்வீச்சு புற்றுநோய் திசுக்களை அழிப்பதோடு, நல்ல திசுக்களையும் அழிக்கும். இச்சிகிச்சையின் பக்கவிளைவுகளாக கடும் வாய்ப்புண், தீக்காயம் போல் வரக்கூடிய தோல் புண், தசைகளை அசைக்க முடியாத இறுக்கம், வாய் வறட்சி, விழுங்குவதில் சிரமம், சிறுநீர், மலம் கழிக்கும்போது எரிச்சல் ஆகியவை ஏற்படும்.

தற்போது நவீன தொழில்நுட்ப கதிர்வீச்சு சிகிச்சை முறைகள் உள்ளன. இச்சிகிச்சையில் செலுத்தப்படும் கதிர் வீச்சு, புற்றுநோய் திசுக்களை மட்டும் அழிக்கும். அருகில் உள்ள நல்ல திசுக்களுக்கு பாதிப்பு மிகக்குறைவு. மேலும் முந்தைய சிகிச்சை முறையில் ஏற்படும் பக்கவிளைவுகளினால் சிகிச்சையை தொடர முடியாத நிலைக்கு தள்ளப்படுவார்கள். புதிய தொழில்நுட்ப சிகிச்சை முறையில் பக்கவிளைவுகள் வெகுவாக குறைவதால் முழுமையாக சிகிச்சையை மேற்கொள்கிறார்கள்.

**நவீன கதிர்வீச்சு சிகிச்சை முறைகள் :** 'ஐ.எம்.ஆர்.டி.'-இது புற்றுநோயை தாக்க வேண்டிய கதிர்வீச்சை பலமுனை வழியாக புற்றுநோய்க்கு மட்டும் செலுத்தக்கூடியது. 'ரேபிட் ஆர்க்'- கதிர்வீச்சு கொடுக்கும் பகுதிக்கு கூர்மையாக கதிர்வீச்சை செலுத்தி 2 நிமிடத்திற்குள் முடித்து விடும். '4டி ஆர்.டி.'- நுரையீரல், கல்லீரல் மற்றும் மார்பக புற்றுநோய்க்கான சிறப்பு தொழில்நுட்பம் ஆகும். இந்த பாகங்கள் மூச்சுவிடும் போது அசையக்கூடியது. அசைவுகளை நிறுத்த முடியாது. இதனால் அசைவுகளுக்கேற்ப இலக்கு மாறாமல் செலுத்தும் கதிர்வீச்சு சிகிச்சை. இதில் பக்கவிளைவுகள் வர வாய்ப்பு குறைவு.

'ஸ்டீரியோடேக்டிக் ரேடியோ தெரபி-எஸ்ஆர்எஸ்'-மூளையில் வரும் அறுவை சிகிச்சை செய்ய முடியாத கட்டிகளுக்கு இச்சிகிச்சையின் மூலம் சிறப்பு கருவி பொருத்தி ஒரே நாளில் அதிக பட்ச கதிர்வீச்சு கொடுத்து, அறுவை சிகிச்சை போல் ஒரு சில கட்டிகளை முழுமையாக கரைக்க முடியும். 'ஸ்டீரியோடேக்டிக் ரேடியோ தெரபி - எஸ்.பி.ஆர்.டி'- நுரையீரலில் உள்ள துவக்க நிலை கட்டிகளுக்கு அறுவை சிகிச்சை செய்யாமல் இச்சிகிச்சை முறையில் 2-3 கதிர்வீச்சு மூலம் சரி செய்ய வாய்ப்புள்ளது. கல்லீரல் மற்றும் நுரையீரலுக்கு பரவக்கூடிய கட்டிகளுக்கும் இதே முறையில் 2-3 கதிர்வீச்சில் சரி செய்ய முடியும்.

**மேலும் விபரங்களுக்கு, கதிர்வீச்சு சிகிச்சை நிபுணர் டாக்டர் இர. மதுசாய்ராம், கே.எம்.சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோவை. போன் : + 91 422 – 4324006, மொபைல் : +91 97897 75100, 98433 81353, இ-மெயில் drmadhusairam@kmchhospitals.com ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.**